ஞானம், கல்வி, கீர்த்தி, செல்வம் அளிக்கும்

ஸ்ரீ ஸரஸ்வதி ஸ்தோத்ரங்கள்



Kalaimagal Traders
Chennai-4

ஸ்ரீ ஸரஸ்வதி ஸ்தோத்ரங்கள்

Kalaimagal Traders Chennai-4

கலைமகள் டிரேடர்ஸ்
(கபாலீஸ்வரர் கோயில் எதிரில்)
5, பொன்னம்பல வாத்தியார் தெரு, மயிலாப்பூர், சென்னை–4.
email - kalaimagaltraders@yahoo.co.in
Ph.044-[illegible]353032 - 24613114

முதற் பதிப்பு–2009 10 11 12
பதிப்பாளர்: கலைமகள் டிரேடர்ஸ்.

விலை–ரூ. 12.00

பொருளடக்கம். பக்கம்.

ஸ்ரீஆதி குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த

சகலகலாவல்லி மாலை

வெண்டாமரைக் கன்றி நின்பதந்
        தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ?
        சக மேழுமளித்
துண்டா னுறங்க ஒழித்தான்பித்
        தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
        சகல கலாவல்லியே! –1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே! –2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன்னருட் கடலிற்

குளிக்கும்படிக்கென்று கூடுங்கொலோ?
உளம் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே! –3

தூக்கும் பனுவற்றுறை தோய்ந்த
கல்வியுஞ்சொற் சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வடநூற்கடலும்

தேக்குஞ் செந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே! –4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே?
நெடுந்தாட் கமலத்
தஞ்சத்துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்

கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே! –5

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காய் எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே! –6

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்
காய் உளங்கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதந்தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப்பேடே
சகல கலாவல்லியே! -7

சொல்விற் பனமும் அவதான
மும்கவி சொல்லவல்ல

நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்
நளினாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே! -8

சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்றநின்னை நினைப்பவர் யார்?
நிலந்தோய்புழைக்கை

நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே! -9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய்வாய்
படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல
கோடியுண்டேனும் விளம்பிலுன்போற்

கண்கண்ட தெய்வ முளதோ?
சகல கலாவல்லியே! -10

கம்பர் அருளிய
சரசுவதி அந்தாதி

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை – தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாராது இடர்.

படிக நிறமும் பவளச்செவ்வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையுந் – துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தால்
கல்லுஞ் சொல்லாதோ கவி

சீர்தந்த வெள்ளிதழ்ப் பூங்கமலா
சனத்தேவி செஞ்சொற்
றார்தந்த என்மனந்
தாமரையாட்டி சரோருகமேற்
பார்தந்த நாதன் இசைதந்த
வாரணப் பங்கயத்தாள்

வார்தந்த சோதியம்போருகத்
தாளை வணங்குதுமே —1

வணங்குஞ் சிலைநுதலுங்
கழைத்தோளும் வனமுலை மேற்
சுணங்கும் புதியநிலவெழு மேனியுந் தோட்டுடனே
பிணங்குங் கருத்தடங் கண்களும்
நோக்கிப் பிரமனன்பால்
உனங்குந் திருமுன் றிலாய்
மறைநான்கும் உரைப்பவளே —2

உரைப்பார் உரைக்குங் கலைகளெல்லாம்
எண்ணில் உன்னையன்றித்
தரைப்பால் ஒருவர் தரவல்லரோ
தண்டரளமுலை
வரைப்பால் அமுது தந்திங்கெனை
வாழ்வித்த மாமயிலே
விரைப்பா சடைமலர் வெண்
தாமரைப்பதி மெல்லியலே –3

இயலா னதுகொண்டு நின்திரு
நாமங்கள் ஏத்துதற்கு

முயலாமையால் தடுமாறுகின்றேன்
இந்த மூவுலகும்
செயலால் அமைத்த கலைமகளே
நின்திரு வருளுக்கு
அயலா விடாமல் அடியேனையும்
உவந் தாண்டருளே -4

அருக்கோ தயத்தினும் சந்திரோ
தயமொத்து அழகெறிக்கும்
திருக்கோல நாயகி செந்தமிழ்ப்
பாவை திசைமுகத்தான்

இருக்கோது நாதனும் தானும்
எப்போதும் இனிதிருக்கும்
மருக்கோல நாண்மலராள் என்னை
யாளும் மடமயிலே —5

மயிலே மடப்பிடியே கொடியே
இளமான் பிணையே
குயிலே பசுங்கிளியே அன்னமே
மனக்கூர் இருட்கோர்
வெயிலே நிலவெழு மேனிமின்னே
இனி வேறுதவம்

பயிலேன் மகிழ்ந்து பணிவேன்
உனது பொற்பாதங்களே -6

பாதாம் புயத்திற் பணிவார்
தமக்குப் பலகலையும்
வேதாந்த முத்தியுந் தந்தருள்
பாரதி வெள்ளிதழ்ப் பூஞ்
சீதாம் புயத்தில் இருப்பாள்
இருப்பாவென் சிந்தையுள்ளே
ஏதாம் புவியில் பெறல்
அரிதாவதெனக் கிளியே -7

இனிநான் உணர்வது எண்ணெண்
கலையாளை இலகுதொண்டைக்
கனிநாணுஞ் செவ்விதழ் வெண்ணிறத்
தாளைக் கமலவயன்
தனிநாயகியை யகிலாண்ட
மும்பெற்ற தாயைமணப்
பனிநாண் மலருறை பூவையை
யாரணப் பாவையையே –8

பாவுந் தொடையும் பதங்களும் சீரும் பலவிதமா
மேவுங் கலைகள் விதிப்பா ளிடம்விதியின் முதிய

நாவும் பகர்ந்ததொல் வேதங்கள்
நான்கும் நறுங்கமலப்
பூவுந் திருப்பதம் பூவா லணிபவர் புத்தியுமே
-9

புந்தியில் கூரிருள் நீக்கும்புதிய மதிய மென்கோ
அந்தியில் தோன்றிய தீபமென்கோ
நல்லரு மறையோர்
சந்தியில் தோன்றுந் தபனனென்
கோமணித்தா மமென்கோ
உந்தியில் தோன்றும் பிரான்புயந்
தோயு மொருத்தியையே -10

ஒருத்தியை ஒன்றும் இலாவென்
மனத்தினு வந்துதன்னை
இருத்தியை வெண்கமலத் திருப்பாளை
எண்ணெண் கலைதோய்
கருத்தியை ஐம்புலனுங் கலங்காமல்
கருத்தை யெல்லாம்
திருத்தியை யான்மற வேன்திசை
நான்முகன் தேவியையே -11

தேவரும் தெய்வப் பெருமானு
நான்மறை செப்புகின்ற

மூவரும் தானவராகி உள்ளோருமுனி வரரும்
யாவரும் ஏனைய எல்லாவுயிரும் இதழ் வெளுத்த
பூவரு மாதினருள் கொண்டு
ஞானம் புரிகின்றதே -12

புரிகின்ற சிந்தையின் ஊடே
புகுந்துபுகுந்து இருளை
அரிகின்ற தாய்கின்ற எல்லா
அறிவினரும் பொருளைத்
தெரிகின்ற இன்பம் கனிந்தூறி
நெஞ்சந்தெ ளிந்துமுற்ற

விரிகின்றது எண்ணெண் கலைமா
னுணர்த்திய வேதமுமே –13

வேதமும் வேதத்தின் அந்தமும்
அந்தத்தின் மெய்ப்பொருளாம்
பேதமும் பேதத்தின் மார்க்கமு
மார்க்கப் பிணக்கறுக்கும்
போதமும் போதவுரு வாகிஎங்கும்
பொதிந்தவிந்து
நாதமும் நாதவண் டார்க்கும்வெண்
தாமரை நாயகியே –14

நாயக மான மலரக மாவதுஞான இன்பச்
சேயக மான மலரக மாவதுந் தீவினையால்
ஏயக மாறி விடுமக மாவது மெவ்வுயிர்க்குந்
தாயக மாவதுந் தாதார்க வேதச ரோருகமே

–15

சரோருக மேதிருக் கோயிலும்
கைகளுந் தாளிணையும்
உரோக கமுந்திரு வல்குலு
நாபியும் ஓங்கிருள்போற்
சிரோகஞ் சூழ்ந்த வதனமு நாட்டமுஞ் சேயிதழும்
ஒரோருக மீரரை மாத்திரை ஆனவுரை மகட்கே

கருந்தா மரைமலர் கட்டாமரை மலர்கா மருநாள்
அருந்தா மரைமலர் செந்தாமரை மலரா லயமாத்
தருந்தா மரைமலர் வெண்தாமரை
மலர்தாவி எழில்
பெருந்தா மரைமணக்குங்
கலைக்கூட்டப் பிணைதனக்கே -17

தனக்கே துணிபொருள் என்னுந்
தொல்வேதஞ் சதுர்முகத் தோன்
எனக்கே சமைந்த வபிடேகம்
என்னு மிகையவர்தா

மனக்கேத மாற்றுமருந்து என்ப
சூடுமலரென் பன்யான்
கனக்கேச பந்திக் கலைமங்கை பூாத கமலங்களே
-18

கமலந்தனில் இருப்பாள் விருப்போடு
அங்கரம் குவித்துக்
கமலங்கடவுளர் போற்றுமென் பூவை
கண்ணில் கருணை
கமலந்தனைக் கொண்டுகண்டு ஒருகால்
தங்கருத்துள் வைப்பார்
கமலங் கழிக்குங் கலைமங்கையாரணி காரணியே

காரணன் பாகமுஞ் சென்னியுஞ்
சேர்தரு கன்னியரும்
நாரணனாக மகலாத் திருவும் ஓர் நான்மருப்பு
வாரணன் தேவியு மற்றுள்ள
தெய்வ மடந்தையரும்
ஆரணப் பாவை பணித்தகுற் றேவல் அடியவரே
-20

அடிவேத நாறுஞ் சிறப்பார்ந்த
வேதம் அனைத்தினுக்கு
முடிவே தவளமுளரி மின்னே முடியா இரத்தின
வடிவே மகிழ்ந்து பணிவார் தமது மயலிரவின்

விடிவே யறிந்தென்னை ஆள்வார்
தலந்தனில் வேறிலையே -21

வேறிலை யென்று னடியாரிற்
கூடி விளங்குநின்பேர்
கூறிலை யானும் குறித்துநின்றேன்
ஐம்புலக் குறும்பர்
மாறிலை கள்வர் மயக்காமல்
நின்மலர்த்தா ணெறியில்
சேறிலை ஈந்தருள் வெண்டா
மரைலர்ச் சேயிழையே -22

சேதிக்கலாம் தர்க்க மார்க்கங்கள்
எவ்வெவர் சிந்தனையும்
சோதிக்க லாமுறப் போதிக்கலாம்
சொன்ன தேதுணிந்து
சாதிக்கலாம் மிகப் பேதிக்கலாம்
முத்திதா னெய்தலாம்
ஆதிக்க லாமயில் வல்லிபொற்
றாளை யடந்தவரே -23

அடையாள நாண்மலர் அங்கையில்
ஏடு மணிவடமும்

உடையாளை நுண்ணிடை ஒன்றும்
இலானை யுபநிடதப்
படையாளை எவ்வுயிரும்
படைப்பாளைப் பதுமநறுந்
தொடையாளை அல்லது மற்று
இனியாரைத் தொழுவதுமே -24

தொழுவார் வலம்வருவார் துதிப்பார்
தந்தொழில் மறந்து
விழுவார் அருமறைமெய் தெரிவார்
இன்பமெய் புளகித்து

அழுவார் இனுங்கண்ணீர் மல்குவார்
என்கணாவ தென்னை
வழுவாத செஞ்சொற் கலைமங்கை
பால் அன்பு வைத்தவரே –25

வைக்கும் பொருளும் இல்வாழ்க்கைப்
பொருளும் மற்றைப் பொருளும்
பொய்க்கும் பொருள் அன்றி நீடும்
பொருள் அல்ல பூதலத்தின்
மெய்க்கும் பொருளும் அழியாப்
பொருளும் விழுப்பொருளும்

உய்க்கும் பொருளும் கலைமாது
உணர்த்தும் உரைப்பொருளே —26

பொருளால் இரண்டும் பெறலாகும்
என்றபொருள் பொருளோ
மருளாத சொற்கலை வான்பொருளோ
பொருள் வந்துவந்திக்
தருவாய் விளங்கு மவர்க்கு ஒளியாய்
அறியாதவருக்கு
இருளாய் விளங்கு நலங்கிளர்
மேனியிலங் கிழையே —27

இலங்குந் திருமுகம் மெய்யிற்
புளகம் எழுங் கண்கணீர்
மலங்கும் பழுதற்ற வாக்கும்
பலிக்கு மனமிகவே
துலங்கு முறுவல் செயக்
கூளிகூடருஞ் சுழல்புனல்போல்
கலங்கும் பொழுது தெளியுஞ்
சொன்மானைக் கருதினர்க்கே –28

கரியார் அளகமுங் கண்ணும் கதிர்முலைக்
கண்ணுஞ் செய்ய

சரியார் கரமும் பதமும் இதழுந்தவள நறும்
புரியார்ந்த தாமரையுந் திருமேனியும் பூண்பனவும்
பிரியாது என்னெஞ்சினு நாவினு
நிற்கும் பெருந்திருவே —29

பெருந்திருவுஞ் சயமங் கையுமாகி
என்பேதை நெஞ்சில்
இருந்தருளுஞ் செஞ்சொல் வஞ்சியைப்
போற்றி யெல்லாவுயிர்க்கும்
பொருந்திய ஞானந்தரும் இன்பவேதப்
பொருளும் தரும்

திருந்திய செல்வம்தரும் அழியாப்
பெருஞ் சீர்தருமே –30

(இவ்வந்தாதியை தினமும் ஓதிவர தீர்க்கமான அறிவையும் ஞாபக சக்தியையும், திரளான செல்வத்தையும், நல்லக் கீர்த்தியையும் சரஸ்வதி அருளால் கிடைக்கப்பெறலாம்)



சரசுவதி சிந்தனை

புத்தகத் துள்ளுறை மாதே!
பூவில் அமர்ந்துறை வாழ்வே!
வித்தகப் பெண்பிள்ளை நங்காய் !
வேதப் பொருளுக்கிறைவி !
முத்தின் குடையுடை யாளே !
மூவுலகுந்தொழு தேவி !
செப்புக் கவித்தன முலையாய் !
செவ்வரி ஒடிய கண்ணாய் !

முத்து நிறைத்தவெண் பல்லாய் !
முருக்கம்பூ மேனிநிறத்தாளே !
தக்கோலந் தின்றதுவர் வாயாய் !
சரசுவதி என்னுற் திருவே !
எக்காலு முன்னைத் தொழுவோம்
எழுத்தறி புத்தி பண்ணுவிப்பாய் !

ஆக்கா எம்பெருமாட்டி !
அழகிய பூஅணை மீதாய் !
நோக்கா யென்மிடி தீர நொடிக்கும்
பிராமணத்தி நோக்காயே !

சாலி நெல்லரி கொண்டு சரசுவதி பூஜை பண்ணி
பாலொடு பழத்தை நிரப்பிப்
பராவித் தொழுவோம் நங்காய்!
நங்காய்! நங்காய்! நமோஸ்து
ஞானக்கொழிந்தே! நமோஸ்து!
கல்விக் கரசே! நமோஸ்து
கணக்கறிதேவி! நமோஸ்து
சொல்லும் பொருளே ! நமோஸ்து
சூக்ஷ்ம ரூபி நமோஸ்து!

சரஸ்வதி துதி

வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் வெள்ளை
அரியா சனத்தில் அரசரோடு என்னை
சரியா சனம் வைத்த தாய் (காளமேகப் புலவர்)

ஆகம வேதம் நான்கும் அருங்கலை
பலவும் இங்கே வாகை யாய்த்
தழைக்கத் தந்து மால் மருகளாய்
வந்தே தாகமாய் உலகளித்த

சதுர் முகன் நாவில் வாழும் மாகனவாணி
அலைகடல் சூழ் உலகமெல்லாம் ஒரு
பிரம நாவிலிருந்து அறிந்தே யாரும்
நலமையுற மறைமுதல் எக்கலையுஞ்
சொல்லியுருள் ஞான மூர்த்தி

(மாணிக்கவாசகர் விலாசம்)

கதிர் வெண்கலையும் துடியிடையுங்
கமலப் பதமும் சசி ஒளிர் சேர்
கருணைக் கடலாந் திருவுருவாய்த்
தவளக் கமலந்தனில் மிக வீற்றிருக்கும் வடிவு

(பிள்ளைத் தமிழ்)

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை – தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே
இருப்பாள் இங்கு வாராது இடர்.

(கவிச்சக்கரவர்த்தி கம்பர்)

வேதன் நாவிலும் வெண்தா மரைச்செழும்
போத லர்ந்த பொகுட்டினு மேவிய
காதல் கூருங் கலைமகள் மேன்மலர்ப்
பாதம் நாளும் பணிந்து வாழ்த்துவாம்

(புராணத் திருமலை நாதர்)

ஸரஸ்வதி ஸ்தோத்ரம்

பத்மபுராணத்தில் பிருஹஸ்பதியால் இயற்றப்பட்டது. இதைப் பாராயணம் செய்வதால் வித்யாலாபம், ஐஸ்வர்யம், மற்றும் வாக்கு சாதுர்யம் உண்டாகும்.

ஸரஸ்வதீம் நமஸ்யாமி
சேதநாநாம் ஹ்ருதிஸ்திதாம் ।
கண்டஸ்த்தாம் பத்மயோநேஸ்து
ஹிமாகர ப்ரியாஸ்பதாம் ॥ –1

மதிதாம் வரதாம் சுத்தாம்
வீணாஹஸ்த வரப்ரதாம் ।

ஐம் ஐம் மந்த்ரப்ரியாம் ஹ்ரீம்
ஹ்ராம் குமதித்வம்ஸ காரிணீம் ॥ -2

ஸுப்ரகாசாம் நிராலம்பாம்
அக்ஞாந திமிராபஹாம் ।
சுக்லாம் மோக்ஷப்ரதாம் ரம்யாம்
சுபாங்காம் சோபநப்ரதாம் ॥ -3

பத்மோபவிஷ்டாம் குண்டலிநீம்
சுக்லவர்ணாம் மனோரமாம் ।
ஆதித்யமண்டலே லீநாம் ப்ரணமாமி ஹரிப்ரியாம்॥

இதி மாஸம் ஸ்துதாநேந வாகீசேந மஹாத்மநா ।
ஆத்மாநம் தர்சயாமாஸ சரதிந்து ஸமப்ரபாம் ॥
-5

ஸரஸ்வதி உவாச -
வரம் வ்ருணீஷ்வ பத்ரம்
தே யத்தே மநஸிவர்த்ததே।

ப்ருஹஸ்பதி உவாச -
வரதா யதி மே தேவி ஸம்யக்ஞாநம் ப்ரயச்ச மே॥

ஸரஸ்வதி உவாச -
இதம் தே நிர்மலம் க்ஞாநம் அக்ஞாந திமிராபஹம்

ஸ்தோத்ரேணாநேந மாம் ஸ்தௌதி
ஸம்யக் வேதவிதோ நர: ॥ –6

லபதே பரமம் க்ஞாநம் மம துல்ய பராக்ரமம் ।
த்ரிஸந்த்யம் ய: படேந்நித்யம்
யஸ்த்விதம் ஜபதேஸதா ।
தேஷாம் கண்டே ஸதா வாஸம்
கரிஷ்யாமி ந ஸம்சய: ॥

சரஸ்வதி அஷ்டகம்

சதானீக உவாச

மஹாமதே மஹாப்ராஜ்ஞ
ஸர்வசாஸ்த்ர விசாரத|
அக்ஷீண கர்ம பந்தஸ்து
புருஷோவைத் விஜஸத்தம|| –1

மரணே யஜ்ஜபேத் ஜாப்யம்
யம் ச பாவமனுஸ்மரன்|
பரம்பதம் அவாப்னோதி தன் மே
ப்ரூஹி மஹாமுனே|| –2

சௌனக உவாச

இதமேவ மஹாராஜ
ப்ருஷ்ட வான்ஸ் தே பிதாமஹ:|
பீஷ்மம் தர்ம விதாம் ச்ரேஷ்டம்
தர்மபுத்ரோ யுதிஷ்டிர: || –3

யுதிஷ்டிர உவாச

பிதாமஹ மஹாப்ராஜ்ஞ ஸர்வ சாஸ்த்ர விசாரத|
ப்ருஹஸ்பதி ஸ்துதா தேவீ
வாகீசேன மஹாத்மனா||
ஆத்மானம் தர்சயாமாஸ ஸூர்யகோடி ஸமப்ரபம்|
–4

ஸரஸ்வத்யுவாச

வரம் வ்ருணீஷ்வ பத்ரம் தே யத்
தே மனஸி வித்யதே॥ –5

ப்ருஹஸ்பதிர் உவாச

யதி மே வரதா தேவி திவ்யஜ் ஞானம் ப்ரயச்ச ந:

தேவீ உவாச

ஹந்த தே நிர்மலஜ் ஞானம்
குமதி த்வம்ஸ காரணம் ।
ஸ்தோத்ரேணாநேந யோ பக்த்யா
மாம் ஸ்துவந்தி மனீஷிண:॥ –6

ப்ருஹஸ்பதிர் உவாச

லபதே பரமம்ஜ்ஞானம் யத் பரைபி துர்லபம்||
ப்ராப்னோதி புருஷோநித்யம்
மஹாமாயா ப்ரஸாதத: -7

ஸரஸ்வதி உவாச

த்ரிஸந்த்யம் ப்ரயதோ நித்யம்
படே தஷ்டக முத்தமம்
தஸ்ய கண்டே ஸதாவாஸம்
கரிஷ்யாமி ந ஸம்சய: -8

ஸரஸ்வதி துவாதச நாமாவளி

ஸரஸ்வதீ த்வியம் த்ருஷ்டா
வீணா புஸ்தக தாரிணீ ।
ஹம்ஸவாஹ ஸமாயுக்தா வித்யா தாநகரீ மம ॥
–1

ப்ரதமம் பாரதீ நாம த்விதீயஞ் ச ஸரஸ்வதீ ।
த்ருதீயம் சாரதா தேவீ
சதுர்த்தம் ஹம்ஸவாஹிநீ ॥ –2

பஞ்சமம் ஜகதீக்யாதா ஷஷ்ட்டம்
வாணீச்வரீ ததா ।
கௌமாரீ ஸப்தமம் ப்ரோக்தா
அஷ்டமம் ப்ரம்ஹசாரிணீ ॥ -3

நவமம் புத்திதாத்ரீ ச தசமம் வரதாயிநீ ।
ஏகாதசம் க்ஷுத்ரகண்டா
த்வாதசம் புவனேச்வரீ ॥ -4

ப்ராஹ்ம்யா: த்வாதச நாமாநி
த்ரிஸந்த்யம் ய:படேந்நர: ।

ஸர்வ ஸித்திகரீ தஸ்ய ப்ரஸந்நா பரமேச்வரீ ||
-5

ஸா மே வஸது ஜிஹ்வாக்ரே
ப்ரஹ்மரூபா ஸரஸ்வதீ

ஸரஸ்வதீ காயத்ரீ

ஓம் ஐம் வாக்தேவ்யை வித்மஹே
காமராஜாய தீமஹி
தந்நோ தேவீ ப்ரசோதயாத்

காளிதாசர் அருளிய

ஸரஸ்வதி நவரத்னமாலை

குசாஞ்சித விபஞ்சிகாம் குடிலகுந்தளாலங்க்ருதாம்
குசே சய நிவேஸிநீம் குடிலசித்த வித்வேஷிணீம்
மதாலஸக திப்ரியாம் மனஸிஜாரி ராஜ்யச்ரியம்
மதங்க குலகந்யகாம் மதுரபாஷிணீ மாச்ரயே
–1

குந்த முகுளாக்ரதந்தாம் குங்கும
பங்கேன லிப்த குசபாராம்

ஆநீல நீலதேஹாமம்பாம்
அகிலாண்ட நாயிகாம் வந்தே -2

ஓங்கார பஞ்ஜர சுகீம் உபநிஷத்
உத்யான கேலிகலகண்ட்டீம்
ஆகம விபினமயூரீம் ஆர்யா
மந்தர் விபாவயே கௌரீம் -3

தயமான தீர்க்க நயனாம்
தேசிகரூபேண தர்சிதாப்யுதயாம்

வாமகுசநிஹித வீணாம்
வரதாம் ஸங்கீத மாத்ருகாம் வந்தே –4

ச்யாமாளி ஸௌகுமார்யாம்
ஆனந்தா மந்த ஸம்பதுந் மேஷாம்
தருணிம கருணாபூராம் மதஜல
கல்லோல லோசனாம் வந்தே –5

நகமுக முகரித வீணாம் நாதரஸா
ஸ்வாதநவந வோல்லாஸாம்
முகமம்ப மோதயது மே முக்தா
தாடங்க முக்தஹஸிதம் தே –6

ஸரிகம பதநிரதாம் தாம்
வீணாஸங்க்ராந்தகாந்த ஹஸ்தாம் தாம்
சாந்தாம் ம்ருது லஸ்வாந்தாம்
குசபரதாந்தாம் நமாமி சிவகாந்தாம் –7

அவடுதடக டிதசூலீ பாலீம் தாளீபலாச தாடங்காம்
வீணாவாதந வேளாகம்பித
சிரஸம் நமாமி மாதங்கீம் –8

வீணாரவாநுஷங்கம் விகசமதா
மோத மாதுரீப் ருங்கம்

கருணா பூரதரங்கம் கலயே
மாதங்க கந்யகாபாங்கம் -9

மணிபங்க மேச காங்கீம்
மாதங்கீம் நௌமிஸித்த மாதங்கீம்
யௌவன வன ஸாரங்கீம்
ஸங்கீதாம் போரு ஹாநுப வப்ருங்கீம் -10

மேசகாமா ஸேச நகம் மித்யா
த்ருஷ்டாந்தமத்ய பாகம் தம்

மாதஸ் தவ ஸ்வரூபம் ச மங்கல
ஸங்கீத ஸௌரபம் வந்தே –11

நவமால்ய மேதத் ரசிதம்
மாதங்க கந்யகாகாபரணம்
ய: படதி பக்தி யுக்த:
ஸபவேத் வாகீச வரஸ்ஸாக்ஷாத் –12

அகஸ்திய முனிவர் அருளிய

ஸ்ரீ ஸரஸ்வதீ ஸ்தோத்ரம்

யா குந்தேந்து துஷாரஹாரதவளா
யா சுப்ர வஸ்த்ராவ்ருதா
யா வீணா வரதண்ட மண்டிதகரா
யா ச்வேத பத்மாஸனா ।
யா ப்ரஹ்மாச்யுத சங்கர ப்ரப்ருதிபி:
தேவைஸ் ஸதா பூஜிதா
ஸா மாம் பாது ஸரஸ்வதீ பகவதீ
நிச்சேஷ ஜாட்யாபஹா ॥ –1

தோர்ப்பிர்யுக்தா சதுர்ப்பி: ஸ்படிக மணி
நிபைரக்ஷமாலாம் ததாநா
ஹஸ்தேநைகேந பத்மம் ஸிதமபி ச சுகம்
புஸ்தகஞ் சாபரேண ।
பாஸா குந்தேந்து சங்கஸ்படிகமணி நிபா
பாஸமாநாऽஸமாநா
ஸாமே வாக்தேவதேயம் நிவஸது வதநே
ஸர்வதா ஸுப்ரஸந்நா ॥ –2

ஸுராஸுரா ஸேவித பாத பங்கஜா
கரே விராஜத் கமனீய புஸ்தகா ।

விரிஞ்சி பத்நீ கமலா ஸநஸ்திதா
ஸரஸ்வதீ ந்ருத்யது வாசிமே ஸதா ||–3

ஸரஸ்வதீ ஸரஸிஜ கேஸர ப்ரபா
தபஸ்விநீ ச்ரித கமலாஸந ப்ரியா|
கநஸ்தநீ கமலவிலோல லோசநா
மனஸ்விநீ பவது வர ப்ரஸாதிநீ || –4

ஸரஸ்வதீ நமஸ்துப்யம் வரதே காமரூபிணீ |
வித்யாரம்பம் கரிஷ்யாமி ஸித்திர்பவதுமேஸதா||
–5

ஸரஸ்வதீ நமஸ்துப்யம் ஸர்வ தேவி நமோநம: ।
சாந்த ரூபேச சிதரே ஸர்வயோகே நமோநம:॥
-6

நித்யானந்தே நிராதாரே நிஷ்களாயை நமோநம:।
வித்யாதரே விசாலாக்ஷி சுத்த ஜ்ஞாநே நமோநம:॥
-7

சுத்த ஸ்படிக ரூபாயை
ஸூக்ஷ்மரூபே நமோநம: ।
சப்தப்ரஹ்மி சதுர்ஹஸ்தே
ஸர்வஸித்த்யை நமோ நம: ॥ -8

முக்தாலங்க்ருத ஸர்வாங்க்யை
மூலாதாரே நமோ நம: ।
மூலமந்த்ர ஸ்வரூபாயை
மூலசக்த்யை நமோ நம: ॥ –9

மநோந்மணீ மஹா யோகே வாகீச்வரீ நமோநம:।
வாக்ம்யை வரத ஹஸ்தாயை வரதாயை நமோநம:॥
–10

வேதாயை வேதரூபாயை வேதாந்தாயை நமோநம:
குணதோஷ விவர்ஜிந்யை குணதீப்த்யை நமோநம:
–11

ஸர்வஜ்ஞாநே ஸதாநந்தே ஸர்வரூபே நமோநம:।
ஸம்பன்னாயை குமார்யை ச
ஸர்வஜ்ஞேதே நமோநம: ।। –12

யோகாநார்ய உமாதேவ்யை
யோகாநந்தே நமோ நம: ।
திவ்யஜ்ஞான த்ரிநேத்ராயை
திவ்யமூர்த்யை நமோநம: ।। –13

அர்த்த சந்த்ர ஜடாதாரி சந்த்ர பிம்பே நமோநம:।
சந்த்ராதித்ய ஜடாதாரி சந்த்ர பிம்பே நமோநம: ।।

அணுரூபே மஹாரூபே விச்வரூபே நமோநம: ।
அணிமாத் யஷ்ட ஸித்தாயை
ஆனந்தாயை நமோநம: ।। -15

ஜ்ஞான விஜ்ஞான ரூபாயை
ஜ்ஞானமூர்த்யை நமோநம: ।
நாநாசாஸ்த்ர ஸ்வரூபாயை
நாநாரூபே நமோ நம: ।। -16

பத்மஜா பத்ம வம்சாச பத்மரூபே நமோநம: ।
பரமேஷ்ட்யை பராமூர்த்யை நமஸ்தே பாபநாசிநீ।।

மஹாதேவ்யை மஹாகாள்யை
மஹாலக்ஷ்ம்யை நமோ நம: ।
ப்ரஹ்மவிஷ்ணு சிவாயை ச
ப்ரஹ்ம நார்யை நமோநம: ॥ –18

கமலாகர புஷ்பா ச காமரூபே நமோ நம: ।
கபாலி கர தீப்தாயை
கர்மதாயை நமோநம: ॥ –19

ஸாயம் ப்ராத: படேந்நித்யம்
ஷாண்மாஸாத் ஸித்தி ருச்யதே ।

கோர வ்யாக்ர பயம் நாஸ்தி
படதாம் ச்ருண்வதாமபி ॥ -20

இத்தம் ஸரஸ்வதீ ஸ்தோத்ரம்
அகஸ்த்ய முனிவாசகம் ।
ஸர்வ ஸித்திகரம் ந்ருணாம்
ஸர்வ பாப ப்ரணாசனம் ॥ -21

ஸ்ரீ ஸரஸ்வத்யஷ்டோத்தரசத நாமாவளி

ஓம் ஸரஸ்வத்யை நம:
ஓம் மஹாபத்ராயை நம:
ஓம் மஹாமாயாயை நம:
ஓம் வரப்ரதாயை நம:
ஓம் ஸ்ரீப்ரதாயை நம:
ஓம் பத்மநிலயாயை நம:
ஓம் பத்மாக்ஷ்யை நம:
ஓம் பத்மவக்த்ராயை நம:
ஓம் சிவாநுஜாயை நம:
ஓம் புஸ்தகப்ருதே நம: –10

ஓம் ஜ்ஞாநமுத்ராயை நம:

ஓம் ரமாயை நம:

ஓம் பராயை நம:

ஓம் காமரூபாயை நம:

ஓம் மஹாவித்யாயை நம:

ஓம் மஹாபாதக நாசிந்யை நம:

ஓம் மஹாச்ரயாயை நம:

ஓம் மாலிந்யை நம:

ஓம் மஹாபோகாயை நம:

ஓம் மஹாபுஜாயை நம: -20

ஓம் மஹாபாகாயை நம:

ஓம் மஹோத்ஸாஹாயை நம:
ஓம் திவ்யாங்க்யை நம:
ஓம் ஸுரவந்திதாயை நம:
ஓம் மஹாகாள்யை நம:
ஓம் மஹாபாசாயை நம:
ஓம் மஹாகாராயை நம:
ஓம் மஹாங்குசாயை நம:
ஓம் பீதாயை நம:
ஓம் விமலாயை நம: -30
ஓம் விச்வாயை நம:
ஓம் வித்யுந்மாலாயை நம:

ஓம் வைஷ்ணவ்யை நம:
ஓம் சந்த்ரிகாயை நம:
ஓம் சந்த்ரவதநாயை நம:
ஓம் சந்த்ரலோகா விபூஷிதாயை நம:
ஓம் ஸாவித்ர்யை நம:
ஓம் ஸுரஸாயை நம:
ஓம் தேவ்யை நம:
ஓம் திவ்யாலங்கார பூஷிதாயை நம: –40
ஓம் வாக்தேவ்யை நம:
ஓம் வஸுதாயை நம:
ஓம் தீவ்ராயை நம:

ஓம் மஹாபத்ராயை நம:
ஓம் மஹாபலாயை நம:
ஓம் போகதாயை நம:
ஓம் பாரத்யை நம:
ஓம் பாமாயை நம:
ஓம் கோவிந்தாயை நம:
ஓம் கோமத்யை நம: –50
ஓம் சிவாயை நம:
ஓம் ஜடிலாயை நம:
ஓம் விந்த்யாவாஸாயை நம:
ஓம் விந்த்யாசல விராஜிதாயை நம:

ஓம் சண்டிகாயை நம:
ஓம் வைஷ்ணவ்யை நம:
ஓம் ப்ராஹ்ம்யை நம:
ஓம் ப்ரஹ்மக்ஞானைக ஸாதநாயைநம:
ஓம் ஸௌதாமந்யை நம:
ஓம் ஸுதாமூர்த்யை நம: -60
ஓம் ஸுபத்ராயை நம:
ஓம் ஸுரபூஜிதாயை நம:
ஓம் ஸுவாஸிந்யை நம:
ஓம் ஸுநாஸாயை நம:
ஓம் விநித்ராயை நம:

ஓம் பத்மலோசநாயை நம:
ஓம் வித்யாரூபாயை நம:
ஓம் விசாலாக்ஷ்யை நம:
ஓம் ப்ரஹ்மஜாயாயை நம:
ஓம் மஹாபலாயை நம: –70
ஓம் த்ரயீமூர்த்தயே நம:
ஓம் த்ரிகாலஜ்ஞாயை நம:
ஓம் த்ரிகுணாயை நம:
ஓம் சாஸ்த்ரரூபிண்யை நம:
ஓம் ஸும்பாஸுர ப்ரமதிந்யை நம:
ஓம் ஸுபதாயை நம:

ஓம் ஸ்வராத்மிகாயை நம:
ஓம் ரக்தபீஜ நிஹந்த்ர்யை நம:
ஓம் சாமுண்டாயை நம:
ஓம் அம்பிகாயை நம: —80
ஓம் முண்டகாய ப்ரஹரணாயை நம:
ஓம் தூம்ரலோசந மர்த்தநாயை நம:
ஓம் ஸர்வதேவஸ்துதாயை நம:
ஓம் ஸௌம்யாயை நம:
ஓம் ஸுராஸுர நமஸ்க்ருதாயை நம:
ஓம் கலாதராயை நம:
ஓம் காளராத்ர்யை நம:

ஓம் ரூபஸௌபாக்யதாயிந்யை நம:
ஓம் வாக்தேவ்யை நம:
ஓம் வராரோஹாயை நம: --90
ஓம் வாராஹ்யை நம:
ஓம் வாரிஜாஸநாயை நம:
ஓம் சித்ராம்பராயை நம:
ஓம் சித்ரகந்தாயை நம:
ஓம் சித்ரமால்ய விபூஷிதாயை நம:
ஓம் காந்தாயை நம:
ஓம் காமப்ரதாயை நம:
ஓம் வந்த்யாயை நம:

ஓம் வித்யாதர ஸுபூஜிதாயை நம:
ஓம் ச்வேதாநநாயை நம: –100
ஓம் நீலபுஜாயை நம:
ஓம் சதுர்வர்கபலப்ரதாயை நம:
ஓம் சதுராநந ஸாம்ராஜ்யாயை நம:
ஓம் ரக்தமத்யாயை நம:
ஓம் நிரஞ்ஜநாயை நம:
ஓம் ஹம்ஸாஸநாயை நம:
ஓம் நீலஜங்காயை நம:
ஓம் ப்ரஹ்மவிஷ்ணு
சிவாத்மிகாயை நம: –108

எமது வெளியீடுகள் பெரிய எழுத்தில்

ஸ்ரீவிஷ்ணு ஸ்தோத்ரங்கள்	12.00
(24 விஷ்ணு ஸ்தோத்ரங்கள் அடங்கியது)	
குழந்தைச் செல்வம் பெற	15.00
(வேற்குழவி வேட்கை – ஸ்ரீ கர்ப்பரக்ஷாம்பிகை ஸ்தோத்ரம்– கர்ப்பரக்ஷாம்பிகை கவசம் – கர்ப்பரக்ஷாம்பிகை போற்றி – வம்ச விருத்திகவசம் – ஸந்தானகோபால கிருஷ்ண மந்த்ரம் – பும்ஸவந விரதம் – திருஞானசம்பந்தர் தேவாரம் – ராமாயணமும் காரியசித்தியும்)	
ஸத்யநாராயண பூஜையும் கதையும்	15.00
(முதன் முறையாக ஸத்யநாராயண அஷ்டோத்திரத்தை தமிழில் கொடுத்துள்ள புத்தகம்)	
கணபதி ஸஹஸ்ரநாமம்	25.00
சக்கரத்தாழ்வார், கருடன் ஸ்தோத்ரங்கள்	12.00
ஸ்ரீ லலிதா	12.00

அபிராமி அந்தாதி, ஸௌந்தர்யலஹரி	20.00
ஆஞ்சநேயர் ஸ்தோத்ரங்கள்	12.00
ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹர் ஸ்தோத்ரங்கள்	12.00
லக்ஷ்மீ ஹயக்ரீவர் ஸ்தோத்ரங்கள், நாராயண கவசம்	12.00
வேதகோஷம் (ருத்ரம், சமகம், 12 ஸூக்தங்கள், சாந்தி பஞ்சகம், ஸ்வஸ்தி வசநம், மந்த்ர புஷ்பம்.)	12.00
யஜுர்வேத த்ரிகால ஸந்தியாவந்தனம் (பட விளக்கத்துடன்)	15.00
கலைமகளின் ரெடிபஞ்சாங்கம் (புது வருட) தர்ப்பண ஸங்கல்பத்துடன்.	05.00
கலைமகளின் கல்யாண பொருத்தம்	15.00

ஆசிரியர்: ஸ்ரீரங்கம் சீ. சேஷாத்திரி ஐயங்கார்.

"இலை, புஷ்பம்,
பழம், தண்ணீர்,
இவை எதையேனும்
யார் பக்தியுடன்
சமர்பிக்கிறாரோ
அதில் நான்
திருப்தி அடைகிறேன்.
நேர்மையற்ற பக்தியை
நான் ஏற்பதில்லை."

கீதை.

Sri Sarasvathi Stothrangal